2018 ஜூன் 6]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

கால்நடை நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல், நவீன கருவிகள் வழங்குதல், நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் நிறுவுதல், புழக்கடை நாட்டுக் கோழி வளர்ப்பை ஊக்குவித்தல், மாதவரம் மற்றும் தஞ்சாவூர் பால் பண்ணைகள் தானியங்கி பால்பண்ணைகளாக விரிவாக்கம், சேலத்தில் டெய்ரி ஒயிட்னர் தொழிற்சாலை, புதிய ஆவின் பாலகங்கள் நிறுவுதல், திருச்சியில் ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல், திருவொற்றியூரில் சூரை மீன்பிடி துறைமுகம் அமைத்தல், கன்னியாகுமரி மாவட்டத்தில் தூண்டில் வளைவு சுவர்கள் அமைத்தல், திண்டுக்கல் மாவட்டத்தில் திலோப்பியா மீன் தொழில்முனைவோர் பூங்கா அமைத்தல் உள்ளிட்ட கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், சமூகப் பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதிலும், வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிப்பதிலும் முக்கியப் பங்காற்றி வரும் சத்துள்ள உணவான பாலின் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கவும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் தங்குதடையின்றி நியாயமான விலையில் கிடைக்கவும் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 6

அரசு எடுத்து வருகிறது. எனவேதான், கால்நடை மேம்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதற்கான திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே, மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, இத்துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்:

(1) அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் சிறந்த கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்க ஏதுவாக, சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்து வருகின்றது. அதன் அடிப்படையில் இதுவரை, 1,895 கால்நடை நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 30 கால்நடை நிலையங்களுக்கு 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) கால்நடை வளர்ப்போருக்கும், விவசாயிகளுக்கும் மருத்துவம் மற்றும் ஈனியல் சம்பந்தமான நோய்களால் ஏற்படும் பொருளாதார இழப்பைத் தவிர்க்க, நவீன நோய் கண்டறியும் கருவிகளை கால்நடை நிலையங்களுக்கு வழங்குவது அவசியமாகும். அதனடிப்படையில், மாவட்டத்திற்கு ஒரு கால்நடை நிலையம் என்ற அளவில் 32 கால்நடை நிலையங்களுக்கு தலா ஒரு நுண்ணலை நுண்ணாய்வுக் கருவியும், ஒரு கணினிமயமாக்கப்பட்ட ஊடுகதிர் கருவியும் 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) தமிழ்நாட்டில் தற்போது 6 மாநகராட்சிகளில் கால்நடை பன்முக மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையங்களை பிற மாநகராட்சிகளிலும் ஏற்படுத்தும் நோக்கோடு திண்டுக்கல், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகள் ஒவ்வொன்றிலும் ஒரு கால்நடை நிலையம், கால்நடை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பன்முக மருத்துவமனைகளுக்கு அறுவை சிகிச்சைக்கூடம், உள் நோய்கள் சிகிச்சை வசதி, நுண்ணலை நுண்ணாய்வுக் கருவி மற்றும் கணினிமயமாக்கப்பட்ட ஊடுகதிர் கருவி (X-ray) போன்ற வசதிகள் 6 கோடியே 24 இலட்சம்

ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அவை 24 மணி நேரமும் செயல்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 26 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் 32 மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் நோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக மேலும் 2 புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் 2 கோடி ரூபாய் செலவில் நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

4. கோமாரி நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்மூலம் மாநிலத்தின் 32 மாவட்டங்களில் 93.89 இலட்சம் மாட்டினங்களுக்கு 15-வது மற்றும் 16-வது சுற்று தடுப்பூசிப் பணி முறையே செப்டம்பர் 2018 மற்றும் மார்ச் 2019 ஆகிய மாதங்களில் 24 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாட்டில் நாட்டுக் கோழி முட்டை மற்றும் இறைச்சியின் தேவை அதிகரித்துள்ளதால், புழக்கடை கோழி வளர்ப்புத் தொழில் பெருமளவில் வெற்றியடைந்துள்ளது. எனவே, புழக்கடை கோழி வளர்ப்பை மேலும் ஊக்குவிக்க, சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 38,500 பெண் பயனாளிகளுக்கு, தலா 50 கோழிகள் 25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

6. திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் தற்போது 280 மாணவர்கள் பயிலுகிறார்கள். இம்மாணவர்களுக்குக் கூடுதல் கட்டமைப்பு வசதிகளாக கூடுதல் வகுப்பறைகள், தேர்வு அறைகள், விடுதி வசதிகள் மற்றும் எச்.டி. மின்சக்தி ஆகிய பணிகள் ஒவ்வொரு கல்லூரிக்கும் தலா 14 கோடி ரூபாய் வீதம் 28 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. சென்னை பெருநகர நுகர்வோர்களின் பெருகி வரும் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில், பால்பண்ணைகளின்

கொள்ளளவை விரிவாக்கம் செய்ய வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகிறது. அதனடிப்படையில் தற்பொழுது நாளொன்றுக்கு 3.5 இலட்சம் லிட்டர் என்ற கையாளும் திறன்கொண்ட மாதவரம் மத்திய பால்பண்ணை, 10 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட புதிய தானியங்கி நவீனமயமாக்கப்பட்ட பால்பண்ணையாக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. சேலம் பால்பண்ணையின் பால் பதப்படுத்தப்படும் திறன் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து 7 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு அதிகரிக்கப்படும். மேலும், நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் டெய்ரி ஒயிட்னர் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. வேலூர்-திருவண்ணாமலை மாவட்ட ஒன்றிய பால்பண்ணை நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்டது. தற்போதுள்ள பால்பண்ணை இயங்கும் இடம் பெங்களூர் நெடுஞ்சாலையில் பாலாறுக்கு அருகே அமைந்துள்ள காரணத்தினால், தற்போதுள்ள இடத்திலேயே விரிவாக்கப் பணிகள் மேற்கொள்வது இயலாததாக உள்ளது. இதனால், நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட புதிய பால்பண்ணை, 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில்நுட்ப கலைநயத்துடனும், (மேசையைத் தட்டும் ஒலி) கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள், தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் பால் பதப்படுத்தும் உபகரணங்களுடனும் புதிய இடத்தில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. தஞ்சாவூர் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 55,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்பால்பண்ணை 25,000 லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் மட்டுமே கொண்டுள்ளது. இது ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதிகளுடன்கூடிய தானியங்கி பால்பண்ணையாக 75 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. மாவட்ட ஒன்றியங்களின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடனும், நுகர்வோர்களின்

2018 ஜூன் 6] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், 30 மாவட்டங்களில் மொத்தம் 500 பாலகங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் வீதம் 20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

12. திருச்சி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். இந்த ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை, அதிநவீன வசதிகளுடன்கூடிய தானியங்கி ஐஸ்கிரீம் கலவை தயாரிக்கும் கருவி, கெட்டியாக்கும் அறை, தானியங்கி சிப்பங்கட்டும் இயந்திரம், குளிரூட்டும் அமைப்பு மற்றும் குளிர்பதன சேமிப்பு அறைகள் கொண்டதாக அமையும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களின் வருவாயைப் பெருக்குவதற்கு முன்னோடித் திட்டங்களைத் தீட்டி, மீனவர் நலன் காக்க மீன் பிடி தடைக் காலத்தில் நிவாரணத் தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக,

13. ஆழ்கடல் மீன்களைக் கையாளுவதற்கு ஏற்ற தரமான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், சென்னை மீன்பிடி துறைமுகத்தில் தற்போதுள்ள இட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், ஒரு சூரை மீன்பிடி துறைமுகம் 200 கோடி ரூபாய் செலவில் திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மீன்பிடி துறைமுகம், ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகுகள் கொண்டுவரும் மீன்களைக் கையாளுவதற்கும், ஏலமிடுவதற்கும் ஏற்ற உலகத் தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

14. கடலூர், முதுநகரில் தற்போதுள்ள மீன்பிடி துறைமுகம்,படகுகளை நிறுத்துவதற்கும், மீன்களை ஏலமிடுவதற்கும், வலை பின்னுவதற்குமான உலகத் தரம் வாய்ந்த கூடுதல் கரையோர வசதிகளுடன் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

15. கன்னியாகுமரி மாவட்டம் 72 கிலோ மீட்டர் நீள கடற்கரையைக் கொண்ட மாவட்டம். ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரத்திற்கும் ஒரு மீனவ கிராமத்தைக் கொண்டுள்ளது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 6

கன்னியாகுமரி மாவட்ட கடற்கரையோரங்களை தாக்கிய 'ஒகி' புயல் மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் வள்ளவிளை, மார்த்தாண்டம்துறை மற்றும் நீரோடி கிராமங்களில் மீனவர்களின் வீடுகளும் உடைமைகளும் பலத்த சேதம் அடைந்தன. எனவே, அம்மீனவர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஆபத்தான அலைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் மேற்படி மூன்று மீனவ கிராமங்களில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறைந்த நீளமுள்ள தூண்டில் வளைவு சுவர்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

16. தற்போது தமிழ்நாட்டில் திலேப்பியா மீன் வளர்ப்பானது மிக இலாபம் தரக்கூடிய ஒரு தொழிலாக வளர்ந்து வருகிறது. இதைக் கருத்தில்கொண்டு, திண்டுக்கல் மாவட்டம், பாலாறு-புரந்தலாறு அணையில் திலேப்பியா மீன் தொழில்முனைவோர் பூங்கா 6 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் குப்பத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனவுத் திட்டமாக இருந்த சூரை மீன்பிடித் துறைமுகத்தை 200 கோடி ரூபாயில் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே, ஆழ்கடலிலே சூரை மீன்கள் அதிகமான அளவிற்கு இருக்கும். எனவேதான், நம்முடைய மீனவர்களின் வாழ்வாதாரம் பெருக வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, சூரை மீன் பிடிக்கப்பட வேண்டுமென்ற வகையில், 50 சதவீத மானியத்தில், 60 இலட்சம் ரூபாய் படகு என்றால் 30 இலட்சம் ரூபாய் மானியம் தருகிறது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய திட்டம் கிடையாது.